செ.வெ.எண்: 669.                                                                 நாள்: 1.10.09

# செய்தி வெளியீடு

## நான்கு காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்கள்

## முதல்வர் ஆணை

(1) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளராகப் பணி புரிந்து வரும் திரு. கு. நாகராசன், (2) நீலகிரி மாவட்டம், குற்றப்பிரிவில் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளராகப் பணி புரிந்து வரும் திரு. சி. விவேகானந்தன், (3) தருமபுரி மாவட்டம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் காவல்துறை துணை கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வரும் திரு. லோ. சீனிவாசன் மற்றும் (4) சென்னை புறநகர், எஸ்–6, சட்டம் மற்றும் ஒழுங்கு, சங்கர் நகர் காவல் நிலையத்தில் காவல்துறை ஆய்வாளராகப் பணி புரிந்து வரும் திரு. பா. தெய்வசிகாமணி என்பவர்களுக்கு கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்க அளவில் பணியாற்றியமைக்காக, 2009 –ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. மேற்சொன்ன விருது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2010, குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன் பரிசுத்தொகையாக தலா ரூ.20,000/– மும் அளிக்கப்படும்.

தேவஜோதி ஜெகராஜன்,
அரசுச் செயலாளர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9